1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாகச் சொன்னேன். இதிலே 'கமர்ஷியல் எக்ஸ்பிளாய்ட்டேஷன்' என்ற அளவிலே கிடைக்கவில்லையென்றுதான் மத்திய அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது.

திரு. இராம அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசின் சார்பில் காரைக்காலிலிருந்து காரைக்குடி வரையில் இந்தச் சோதனையை நடத்த ஆரம்பிப்பதாகச் சொன்னர்கள். 10 ஆண்டுகளாகியும் இன்னும் இந்தச் சோதனை முற்றுப் பெருததற்குக் காரணம் யார்? நம்முடைய அரசா, மத்திய அரசா? அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசுதான் இந்தச் சோதனையை நடத்தி வருகிறது. அவர்களுடைய முடிவு இந்தப் பகுதியிலே அதிக அளவிலே, பயன்படுத்துகிற அளவுக்கு எண்ணெயோ, வாயுவோ கிடைக்காது என்பது. இத்துடன், இன்னும் அதிக அளவில் கிடைக்கின்ற மாநிலங்களுக்கு 'பிரிஃபெரென்ஸ்', முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்றும் சொல்கிருர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினுக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

Employees in Mint Street Branch of Government Press.

* 22 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) the number of workers employed in the Government Press at Mint Street, Madras; and

(b) the number of workers for whom Government accommodation has been provided?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 4,311.

(ஆ) 300.

திருமதி த. ந. அனந்தநாயகி : தொழிலாளர்களுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற அரசு, அதனிடம் வேலை செய்கிற 4,311 பேர்களுக்கு வசதிசெய்துகொடுக்காமல் இருக்கிருர்களே, எப்பொழுது அதைச் செய்யப்

தொழிலாளர்கள் அனைவருக்கும் அந்த வசதிகளைச் செய்து கொடுத்து வழிகாட்டியாக இருக்கக்கூடிய முறையில் அரசாங்கம் முயற்சிசெய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, படிப்படியாக அவர்களுக்கு வசதிகள் செய்துதரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 23.

THIRU K. T. K. THANGAMANI: I am trying to catch your eye. This is an important question, சார், இந்த பிரஸ்ஸைப் பொறுத்தவரையிலும் புதிதாக விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறதே அதனால் எத்தனை பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டார்கள்? அவர்கள் எந்த முறையிலே வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை. வீடு கட்டிக்கொடுப்பதைப் பொறுத்த வரையில்தான் விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அரசாங்கமே தொழிலாளர்களுக்கு 300 பேர்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருகின்ற முறையிலே ஃபோர்ஷோர் எஸ்டேட், டாட்ஹண்டர் நகர், (சைதாப்பேட்டை), பி.டபிள்யு. டி. குவார்ட்டர்ஸ் ஆகிய அரசாங்க இடங்களிலே குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, my question has not been answered in full. My original question is this. I wanted to know the number of workers in the Press and how many new workers have been recruited and how they have been recruited That is the first part of my question. The second part of my question is how many of them have been provided with quarters. The spirit of the question has not been answered in full.

THE HON. THIRU S. RAMACHANDRAN: The spirit of the question is this. Out of the total number of workers employed in the Press, how many of them have been provided with the quarters. My answer is this. Out of a total number of 4,311 workers, 300 persons have been provided wih quarters. That was the spirit and form of the question. The spirit and form of the quesion have been fully answered by the Government.